3. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்

Grant of loans for the Gazetted Police Officers

* 264 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the number of Police Officers (Gazetted) to whom loans were sanctioned by the Government for—

(1) the construction of houses; and

(2) the purchase of houses during the last five years in **Madras City; and**

(b) the estimated cost of these buildings ?

பதிவுபெற்ற காவல்துறை அதிகாரிகளுக்கு கடன்கள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) சென்னை மாநகரில் கடந்த ஐந்தாண்டுகளில் அரசிதழ் பதிவு பெற்ற காவல்துறை அதிகாரிகள் (1) வீடு கட்டிக் கொள்ளவும், (2) வீடுகள் வாங்கவும் அரசு கடன் வழங்கியுள்ளதா ?

(இ) அக்கட்டிடங்களின் மதிப்பீட்டுத் தொகை என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : *(அ) கடந்த ஐந்தாண்டு களில், இந்தியக் காவல் துறைப்பணியைச் சேர்ந்த ஆறு அதிகாரி கள் உட்பட, அரசிதழ் பதிவு பெற்ற காவல்துறை அதிகாரிகள் பதினேழு பேர்களுக்கு வீடுகள் கட்டக் கடன்கள் கொடுக்கப் பட்டன. இந்தியக் காவல்துறைப் பணியைச் சேர்ந்த அதிகாரி ஒருவருக்கு மட்டும் சென்னை மாநகரில் வீடு வாங்குவதற்காக கடன் கொடுக்கப்பட்டது.*

(இ) கட்டிடங்களின் மதிப்பீட்டுச் செலவு, ஏறத்தாழ ரூ. 8,26,240 ஆகும்.

THIRU D. SANTOSHAM : Is it a scheme for advancing loans to the Police Officers only or a general scheme available to all the Government servants?

[1972 நவம்பர் 13

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அரசு இதழ் பதிவு பெற்றவர்களுக்கும், என்.ஜி.ஓ.-க்களுக்கும் மேற்படி கடன் கொடுக்கப்படுகிறது.

Integrated Water-Supply Scheme

* 265 —.—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. C. SENGOTTUVELAPPA GOUNDER) : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the expenditure incurred for the implementation of the Integrated Water-Supply Scheme from Bhavani River up to Chennimalai in Coimbatore District;

(b) the number of Panchayats benefited by that Scheme; and

(c) whether the financial aid given by the State for the Scheme is in the form of grant or loan?

கூட்டு குடிநீர் திட்டம்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். சி. செங்கோட்டுவேலப்ப கவுண்டர் சார்பில்) : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோவை மாவட்டத்தில் பவானி ஆற்றிலிருந்து சென்னிமலை வரை செயல்படுத்தப்பட்டு வரும் கூட்டு குடிநீர் திட்டத்திற்கு எவ்வளவு தொகை செலவு செய்யப்பட்டுள்ளது ?

(இ) அதனால் நன்மை அடைந்துள்ள பஞ்சாயத்துக்கள் எத்தனை ?

(உ) மேற்படி திட்டச் செலவுகளுக்கு அரசு வழங்கியுள்ள நிதி உதவி மான்யமாகவா அல்லது கடனாகவா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) இந்தக் கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு 1972-ம் ஆண்டு மே மாதம் வரை மொத்தம் ரூ. 41.69 லட்சம் செலவு ஆகியிருக்கின்றது.

(இ) இத்திட்டத்தின் மூலம் கீழ்க்கண்ட 15 கிராமங்கள் நன்மை அடையும்—

(1) சித்தோடு.

(2) குமிழியம்புரம் (சூரியம்பாளையம்).

(3) கங்காபுரம்.